1987 நவம்பர் 12]

ஆழத்தில் இருக்கிறது என்று நான் சொல்லியிருக்கிறேன். ஆகவே அவ்வளவு ஆழத்தில் உள்ளதை எடுப்பது என்றால் சுரங்கம்தான் தோண்ட வேண்டும். ஆனால் நெய்வேலியில் இருப்பது திறந்த வெளி சுரங்கம். அதை எடுப்பது சுலபம். இது கடினம், விலையும் கட்டுப்படியாக வேண்டும். மேலும் இந்தியாவிலே பல்வேறு பகுதிகளிலே நிலக்கரி கிடைக்கிறது. எனவே விலை கட்டுப் படியாகக்கூடிய நிலைமை இருந்தால் இதை எடுப்பது பற்றி மீண்டும் ஆலோசிக்கலாம். மத்திய அரசினிடத்திலே இப்போது எந்த உதவியும் கோருவது ஒன்றும் பயன்படாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப் பிடும் போது *300* மீட்டருக்கும் கீழே இருப்பதனால், அதிக ஆழத்தில் இருப்பதனால் அதிகமான செலவு பிடிக்கும் கட்டுப் படியாகாது என்று குறிப்பிட்டார்கள். அந்தக் குறிப்பிட்ட கரியை எடுப்பதற்கு ஆகக் கூடிய செலவை மட்டும் வைத்து லாப நஷ்டக் கணக்குப் பார்க்காமல், அந்தக் கரியினால் ஏற்படக் கூடிய மற்றைய விளைவுகளையும் சேர்த்து வைத்து ஒட்டு மொத்தமாகப் பார்த்து, தமிழ்நாட்டினுடைய நலன் கருதி அந்த திட்டத்தை மீண்டும் எடுத்துக் கொள்ள அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டிலே பூராவையும் நஷ்டத் திலே நடத்திக் கொண்டிருக்க முடியாது.

பைங்குளம் குடி தண்ணீர் திட்டம்.

66—(*வினா எண் *12391*)—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுக்கா வில் உள்ள பைங்குளம் குடி தண்ணீர் திட்டம் எப்பொழுது தொடங்கப்படும்?

(ஆ) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுக்காவில் உள்ள பைங்குளம் கிராமப் பேரூராட்சி மற்றும் வழியில் உள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்க ரூ. 37 இலட்சங்கள் உத்தேச மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட திட்டம் தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத் தின் பரிசீலனையில் உள்ளது.

[1987 நவம்பர் 12

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இநதத் திட்டத்தின் பெரும்பான்மையான பகுதி தேங்காய் பட்டணம், இணையம், புத்தன் துறை, முள்ளூர் துறை, இராமன் துறை போன்ற மீனவ கிராமப் பகுதியைச் சார்ந்தது. அது மட்டும் அல்லாமல் அம்சி, கூட்டலாம் மேடு, வேட்டமங்கலம் போன்ற பகுதிகள் எல்லாம் குடி தண்ணீருக்கு மிக சிரமமான பகுதிகளாகும். ஆகவே அங்கே எந்தவிதமான முயற்சிகளை தமிழ்நாடு குடிதண்ணீர் வடிகால் வாரியம் மேற்கொண்டாலும் கூட நல்ல தண்ணீர் கிடைப்பது இல்லை. அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கிற காரணத்தாலே, அதிகக் காலதாமதம் ஆகாமல் இந்த ஆண்டே அந்த வேலையை எடுத்துக் கொள்வதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, திட்ட மதிப்பீட்டின் தலைமைப் பொறியாளர், தென் மண்டலம், மதுரை அவர்கள் இதைப் பரிந்துரைக்க ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அவர்களால் பரிந்துரைக்கப்பட்டதற்குப் பிறகு அந்தக் கோப்புகள் நம்மிடத்திலே வந்த பிறகு, அரசினுடைய ஒப்புதல் வழங்கப் பெற வேண்டும். வழங்கப்பட்டதற்குப் பிறகு அடுத்த ஆண்டிலே இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள் வதைப் பற்றி அரசு முடிவு எடுக்கும்.

டாக்டர் கே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டிலே எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல கன்னியா குமரி மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும், இப்போது எடுத்திருக்கிற குடி தண்ணீர் திட்டத்தில் இப்போது எடுத் திருக்கக் கூடிய ஏரியாக்களுக்கு சர்வே பண்ணி இருக்கக் கூடிய பகுதிகளை விட இன்னும் அதிகமான பகுதிகள் சர்வே பண்ண வேண்டியிருக்கின்றன. அவைகளையும் சேர்த்து இந்தத் திட்டத்தில் இணைத்து தருவீர்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம் சிறப்பாக செயல்பட் டுக் கொண்டு வருகிறது. எல்லா இடங்களுக்கும் தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பதிலேதான் இந்த ஆட்சி மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்கள் கூட மிகுந்த கவலையோடு, அக்கறையோடு கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஏதாவது இடம் விட்டு போயிருக்குமேயானால் அதையும் மாண்புமிகு உறுப்பினர்கள், குடிதண்ணீர் வடிகால் வாரியத்திடம் தகவல் தருவீர்க ளானால், அதையும் சேர்த்து திட்டத்தில் இணைத்துக் கொள் வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.